IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.17/2022**

**நாள்– 03.04.2024**

சமுத்திரம்

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் விபத்து முன்பாக Studio வில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். இரு சக்கர வாகனத்தை Studio வின் உரிமையாளர் ஓட்டினார். நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். நான் வந்த சாலை நேரான சாலை என்றால் சரிதான். நின்று கொண்டிருந்த லாரியின் மீது நான் சென்ற வாகனத்தை ஓட்டியவர் மோதி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் அவர் மெதுவாக தான் சென்றார். என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. லாரி நின்று கொண்டிருந்தது எனக்கு தெரியாது. வெளிச்சம் இல்லாததால் எனக்கு எதுவும் தெரியவில்லை. இரு சக்கர வாகனத்தை ஓட்டிய நபரினால் தான் விபத்து ஏற்பட்டியிருக்கிறது என்பதால் இந்த எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சிறிய காயங்கள் என்றால் சரியல்ல. இந்த காயங்கள் அனைத்தும் மருத்துவ சிகிச்சையினால் குணமடைந்து விட்டது என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் தலைகவசம் அணிந்துயிருந்தார். எனக்கு அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்களா என்றால் தலையில் மூக்கில் தையல்கள் இடப்பட்டியிருக்கிறது. அரசு மருத்துவமனையில் தான் நான் சிகிச்சை எடுத்தியிருக்கிறேன். விபத்து சமயத்தில் நான் சென்ற இருசக்கர வாகனத்தில் எந்த இயந்திரம் கோளாறுகளும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தப்பட்ட மாதிரி வரைபடம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் மீது தான் தவறு என்று தெரிந்துவிடும் என்பதால் தான் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை

காண்பிக்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தானது இருசக்கர ஓட்டியவரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதால் இந்த எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.04.03 17:04:25 +0530